**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

| | | | |
|---|---|---|---|
| Calendar | : | **C.C.No. 119/2009** | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | | Prosecution : | **PW - 8** |
| | | Defence : | |
| | | Court : | |
| Name | : | சங்கர் | |
| Father / Husband Name | : | பொன்னர் | |
| Village | : | சென்னை | |
| Taluk | : | சென்னை | |
| Caste & Religion | : | இந்து | |
| Calling | : | முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியம், | |
| Age | : | 52/2023 | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.01.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திரு எம். செழியன், தட்டச்சர்**

**<u>C.C.No. 119/2009 19.01.2023</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.25**

**முதல் விசாரணை:**

நான் தற்போது முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியம், சென்னையில் பணிபுரிந்து வருகின்றேன். அ.சா.1 முகமது பாரூக் என்பவர் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தவர் ஆவார். கடந்த 2005 டிசம்பர் மாதத்தில் இருந்து 2007 பிப்ரவரி மாதம் வரை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (பொதுவாக) பணியில் இருந்து வந்தேன். அ.சா.1 எங்கள் அலுவலகத்தில் நகல் கேட்டு மனு செய்து இருந்தார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.6 ல் உள்ள மாவட்ட ஆட்சியருக்காக, தஞ்சாவூர் என்னும்

**C.C.No. 119/2009    19.01.2023**

ந.ம.எண். 6/2006/ஆ 2 என்ற ஆவணத்தில் 24.01.2006 ம் தேதி கையெழுத்து செய்து நகல் வழங்கியுள்ளேன். **(அந்த SLR பதிவேட்டின் நகலில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.31 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.6 ல் உள்ள மாவட்ட ஆட்சியருக்காக, தஞ்சாவூர் என்னும் ந.ம.எண். 9/2006/ஆ 2 என்ற ஆவணத்தில் 10.02.2006 ம் தேதி கையெழுத்து செய்து நகல் வழங்கியுள்ளேன். **(அந்த SLR பதிவேட்டின் நகலில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.32 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி ஆவணங்கள் புதுப்பட்டினம் கிராமத்தின் ரீசர்வே எண் 31/1, 31/2 உட்பிரிவுகள் சிதம்பரம் செட்டியார் என்பவரின் பெயரில் பதிவு இருந்தது. வழக்கு சம்மந்தமாக தஞ்சாவூர் மாவட்ட குற்றப் பிரிவு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

மேற்படி அ.சா.ஆ.31, 32 ஆவணங்களில் நான் மனுவின்பேரில் நகல் வழங்கியுள்ளேன். அந்த மனுவில் சர்வே எண் 31/1, 31/2 என குறிப்பிடப்பட்டு சான்றிட்ட நகல் கேட்கப்பட்டு இருந்தது. மேற்படி ஆவணங்களுக்காக இரண்டு மனுக்கள் சம்ர்ப்பிக்கப்பட்டது. இந்த மனுக்கள் இரண்டுமே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாகும். இந்த சொத்துக்கள் சம்மந்தமாக வேறு ஏதேனும் மனுக்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கேட்கப்பட்டதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் 2005 டிசம்பரில் இருந்து 2007 வரை மட்டும்தான் மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்தேன். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் மனுக்களுக்கு சான்றிட்ட நகல்களில் கையொப்பம் இடும் அலுவலர், PA General ஆவார். நான் ஒருவர் மட்டுமே PA General ஆக பணியில் இருந்தேன்.

எனக்கு முன்பு இப்பதவியில் இருந்தவர் திரு லெட்சுமணன் ஆவார். இந்த சொத்துக்கள் மற்றும் வக்பு போர்டு சொத்துக்கள் சம்மந்தமாக அளவீடு செய்ய ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்பட்டதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. சிதம்பரம் செட்டியாருக்கு எதன் அடிப்படையில் மேற்படி சொத்துக்கள் உரிமை என்று எ தன் அடிப்படையில் வழங்கியுள்ளேன்

**C.C.No. 119/2009    19.01.2023**

என்றால் SLR பதிவேடு அடிப்படையில் வழங்கியுள்ளேன். மேற்படி சொத்துக்கள் சம்மந்தமாக ROR எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்துக்கள் சம்மந்தமாக ROR எங்கள் அலுவலகத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியும் என்றும், அதனை மறைத்து SLR பதிவேட்டை மட்டும் வைத்து நகல் வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்கள் எந்த வருடம் சிதம்பரம் செட்டியாருக்கு உரிமம் ஆனது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி சொத்துக்கள் சிதம்பரம் செட்டியாருக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் உரிமம் உள்ளது என்று தெரியாமல், நானாக மேற்படி ஆவணங்களை வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

மனுதாரர் கேட்டுக் கொண்டதற்காக மேற்படி ஆவணங்களை வழங்கியுள்ளேன் என்றால் நான் அலுவலக நடைமுறைபடித்தான் நகல் வழங்கியுள்ளேன். மேற்படி சொத்துக்கள் சம்மந்தமாக உரிமையியல் வழக்கு உள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்படி சொத்துக்கள் சம்மந்தமாக உரிமையியல் வழக்குகள் உள்ளது என்றும், அதனை பரிசீலிக்காமல் மேற்படி ஆவணம் வழங்கியுள்ளேன் என்றால் நான் அலுவலக ஆவணத்தின் அடிப்படையில் தான் நகல் வழங்கியுள்ளேன். 1934 க்கு முன்புள்ள பதிவேடுகள் எங்கள் அலுவலகத்தில் பராமரித்து வ ரப்படுகிறது என்றால் சரிதான். 1934 க்கு முன்புள்ள சர்வே ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் பராமரித்து வரப்படுகிறதா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

எங்கள் அலுவலகத்தில் எனக்கு முன்பாக முகமது இஸ்மாயில் பணியில் இருந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 2003 – 2004 ம் ஆண்டு முகமது இஸ்மாயில் பணியில் இருந்தபோது மேற்படி ஆவணங்கள் சான்றிட்டு நகல் வழங்கப்பட்டது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. 2 வது மற்றும் 3 வது எதிரிகள் சார்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2000 முதல் 2010 வரை யார் யார் அலுவலகத்தில் பணிபுரிந்தார்கள் என்ற விபரம் கேட்டு மனு அளித்திருந்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக எங்கள் அலுவலகத்தில் உள்ள சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் கோப்புகளை பார்வையிட்டேன். நான் கோப்புகளை பார்வையிட்டு இருந்தால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட மனுக்கள் பற்றி

**C.C.No. 119/2009    19.01.2023**

தெரிந்து இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. வக்பு போர்டு சம்மந்தம் மற்றும் பிற்படுத்தப்பட்ட பழங்குடியினர் சம்மந்தப்பட்ட சொத்துக்களின் விபரங்களுக்கு தனிப்பட்ட அதிகாரிகள் உள்ளனர் என்றால் சரிதான்.

வக்பு போர்டு சம்மந்தப்பட்ட சொத்துக்களுக்கு தனிப்பட்ட அதிகாரி உள்ளதால் நான் சான்றிட்ட நகல் வழங்க இயலாது என்றால் சரியல்ல, மேற்படி சொத்துக்கள் தனியார் பெயரில் இருந்தது. மேற்படி சொத்துக்கள் 1934 ம் ஆண்டுக்கு முன்பாக வக்பு போர்டுக்கு சொந்தமானது என்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்படி விபரத்தை மறைத்து தனியாருக்கு சொந்தமானது எனது பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.